முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

OS.No.641/2019 பெயர் : ஷேக் அலாவுதீன் நாள் : 11.09.2025

பி.வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா. 1 : வாதி தரப்பில் குறுக்கு விசாரணை (முதல் பிரதிவாதி ஏற்றுக்கொள்கிறார்).**

எனது தாயார் பெயர் நூர்ஜகான். தந்தையார் பெயர் S.A.குத்தூஸ் பாய். வாதி எனது உடன் பிறந்த சகோதரர் என்றால், சரிதான். 1-ம் பிரதிவாதி எனது சகோதரி என்றால், சரிதான். 2-ம் பிரதிவாதி என்னுடைய மற்றொரு சகோதரர் என்றால், சரிதான். 3-ம் பிரதிவாதி என்னுடைய மற்றொரு சகோதரி என்றால், சரிதான். 4, 5 பிரதிவாதிகள் எனக்கு காமீலா பானு மூலம் பிறந்த மகள்கள் என்றால், சரிதான். நாங்கள் அனைவரும் இஸ்லாமிய லப்பை சன்னி இனத்தை சேர்ந்தவர்கள் என்றால், சரிதான். எங்கள் அனைவருக்கும் இஸ்லாமிய ஷரியத் சட்டப்படி தான் சொத்து உரிமை உண்டு என்றால், சரிதான். தாய், தந்தை இறந்து விட்டால் ஆண் வாரிசுகளுக்கு 2 பங்கும், பெண் வாரிசுகளுக்கும் 1 பங்கும் சொத்தில் உரிமை உண்டு என்று சொன்னால், சரிதான். தாவா சொத்து 2 அடுக்குமாடிகள் கொண்ட 3 தளங்கள் உடைய வீடு என்றால், சரிதான். என் தகப்பனார் குத்தூஸ் 04.01.2013-ம் தேதி காலமாகிவிட்டார் என்றால், சரிதான். எனது தாயார் நூர்ஜகான் 14.04.2016-ம் தேதி இறந்து விட்டார். தாவா சொத்து 28.04.1999-ம் தேதிய கிரைய பத்திரப்படி (வா.சா.ஆ.1) தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால், சரிதான். என் தாயார் 13.01.2012-ம் தேதி அன்று எழுதி வைத்த பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் படி தனக்கு 5-ல் 1 பாகம் பிரித்து தரக்கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால், சரிதான். அத்துடன் வருமான இழப்பீடு கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால், சரிதான். வா.சா.ஆ.2 தானசெட்டில்மெண்ட் படி எனது

தாயார் வாதிக்கு 5-ல் 1 பங்கும், 1, 2, 3 பிரதிவாதிகளுக்கு தலா 5-ல் 1 பங்கும், 4, 5 பிரதிவாதிகள் ஆகிய எனது மகன்கள் இருவருக்கும் சேர்த்து 5-ல் 1 பங்கும் கிடைக்கும்படி தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளார், அந்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் படி எனக்கு எந்த பாகமும் ஒதுக்கப்படவில்லை என்றால், சரிதான். எனது பெற்றோருக்கு நான்தான் தலைமகன் என்றால், சரிதான். எனது தந்தை 1985-க்கு முன்பு இருந்தே கூட்டு முயற்சி சங்கு மார்க் பீடி கம்பெனி என்ற பீடி தயாரிக்கும் கூட்டாண்மை நிறுவனம் நடத்தி வந்தார் என்றால், சரிதான். தமிழ்நாட்டில் மிக பிரபலமாக வியாபாரமாகி வந்த பீடி கம்பெனி என்றால், சரிதான். அதில் கோடி கணக்கில் வருட வருமானம் வந்தது என்றால், சரிதான். அந்த வருமானத்தை வைத்து எனது தந்தை கோடிக்கணக்கான சொத்துக்கள் வாங்கியுள்ளார் என்றால், சரிதான். ஈரோடு சங்கு நகரில் 250 பீடி சுற்றும் இஸ்லாமிய தொழிலாளிகளுக்கு இலவசமாக வீட்டுமனைகள் தானமாக கொடுத்தார் என்றால், சரிதான். அதேபோல் விஜயமங்கலம் டோல்கேட் அருகே சங்கு நகர் என்ற பெயரில் நிலம் வாங்கி மனைகளாக பிரித்தார், அதில் 90% அங்கு பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு இலவசமாக வீட்டுமனை நிலம் வழங்கினார் என்றால், சரிதான். இன்னும் பல இடங்களில் மசூதிகள் கட்டிக்கொடுத்தார் என்றால், சரிதான்.

அதேபோல எனக்கும், எனது சகோதரர்களுக்கும் நிறைய சொத்துக்களை எனது தந்தை கொடுத்தார் என்றால். சரிதான். அதேபோல் சகோதரிகளுக்கும் நல்ல முறையில் திருமணம் செய்துக்கொடுத்தார் என்றால், சரிதான். நான் கல்லூரி முடித்த பின் தோல் பதனிடும் தொழில் செய்யப்போவதாக கூறியதாலும், கோழிப்பண்ணை வைக்க கேட்டதாலும், எனக்கு அதில் முதலீடு செய்வதற்கு எனது தந்தை பணம் கொடுத்தார் என்றால், கோழி பண்ணை வைக்கவில்லை, எனது அத்தை மகன் மற்றும் மற்றொரு

பங்குதாரருடன் சேர்ந்து தோல் பதனிடும் தொழில் செய்வதற்கு சொற்ப பணம் கொடுத்தார். கோழிப்பண்ணைக்கும், தோல் பதனிடும் தொழிலுக்கும் எனது தந்தை நிறைய பணம் கொடுத்தார் என்றால், சரியல்ல, தோல் பதனிடும் தொழிலுக்கு மட்டும் சொற்ப பணம் கொடுத்தார். இந்த பணத்தை ஊதாரி தனமாக செலவு செய்து நஷ்டம் ஏற்படுத்தி விட்டேன் என்று சொன்னால், சரியல்ல. 2013-ல் எனது தந்தை இறக்கும் வரை என்னுடைய மகன்களுக்கும், மகள்களுக்கும் நல்ல முறையில் சீரும், பணமும் கொடுத்து வந்தார் என்றால், சரிதான். 04.01.2013-ம் தேதி அன்று எனது தந்தை இறந்தவுடன் கூட்டு முயற்சி சங்கு மார்க் பீடி கம்பெனி என்ற கூட்டாண்மை நிறுவனம் 2 பங்குதாரர்களில் ஒருவர் இறந்ததால், கலைக்கப்பட்டது என்றால், சரிதான். மேற்படி கூட்டாண்டை நிறுவனம் கலைக்கப்பட்டதால், 01.07.2017-ம் தேதி அன்று குத்தூஸ் பாயின் வாரிசுகளாகிய நாங்கள் பீடி தொழிலை மீண்டும் ஆரம்பிக்க எண்ணி சங்கு பீடிகள் என்ற கூட்டாண்மை நிறுவனத்தை ஆரம்பித்தோம் என்றால், சரிதான். அந்த நிறுவனத்தில் வாதி, நான், என்னுடைய மற்றொரு சகோதரரான 2-ம் பிரதிவாதி, 1-ம் பிரதிவாதி சகோதரியும் சேர்ந்து பீடி உற்பத்தி செய்ய ஆரம்பித்தோம் என்றால், சரிதான். அந்த பீடி தொழில் சங்கு பீடிகள் என்ற பெயரில் GST-ன் பதிவு செய்யப்பட்டது. மேற்படி ஆவணம் தான் என்னிடம் காட்டப்படுவது **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கூட்டாண்மை நிறுவனத்தின் ஒப்பந்தப்படி எங்கள் நால்வருக்கும் சரிசம பங்கு என்றால், சரிதான். வாதியானவர் இந்த கூட்டாண்மை நிறுவனத்தின் நிர்வாக பங்குதாரர், மற்ற மூவரும் வெறும் பங்குதாரர்கள். என் சகோதரி 1-ம் பிரதிவாதி குடும்ப தலைவி, 2-ம் பிரதிவாதி மற்றொரு பங்குதாரர் ஜியாபுதீன் 2 மருந்து கடைகள் வைத்து அதனை கவனித்து வந்தார் என்றால், சரிதான். வெளி மாநிலங்களுக்கு சென்று பீடி இலைகளை வாங்குவது,

புகையிலை துகள்கள் ஆகியவைகளை வாங்குவதும், பீடி கம்பெனியின் நிர்வாகத்தையும் வாதி தான் கவனித்து வந்தார் என்றால், சரிதான். பீடி தொழிலில் வரும் வருமானத்தை மாதம் மாதம் 4 கூட்டாளிகளும் தலா ரூ.20 ஆயிரம் எடுத்துக்கொண்டோம் என்றால், சரிதான்.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**